மார்ச் 2021

# கொலம்பஸ் தமிழ் சாரல்

வசந்தகால இதழ்

வெள்ளி விழா ஆண்டு

bestbrains

# உள்ளடக்கம்


தலையங்கம்…………………………………..2

அமைதியாய் நான்…………………………..5

தமிழ்ச் சங்கத்துடன் நான்…………………..6

பயணங்கள் முடிவதில்லை……………….9

சமைக்க ருசிக்க………………………………..10

வேலையில்லாப் பட்டதாரி……………...13

தமிழ்நாடு தமிழைநாடு……………………20

புகைப்படக் கலைஞர்களின் கனவு…....21

விடியலை நோக்கி…………………………23

கொலம்பஸ் தமிழ்ச் சங்க செய்திகள்…..24

சித்திரம்…………………………………………..26

காத்திருந்த காலம்………………………….28

தமிழ்ச் சங்க நிர்வாகக் குழு…………......33

சாரல் குழு……………………………………..34

சரிபார்த்தோர் குழு…………………………..35




# <u>தலையங்கம்</u>

அன்புள்ள வாசகர்களுக்கு,

சாரலின் கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் வெள்ளி விழா சிறப்புப் பதிப்பிற்கு உங்களை வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி. 1996 ஆம் ஆண்டில் நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் தொடங்கி வைத்த கொலம்பஸ் தமிழ்ச் சங்கம், மத்திய ஒஹாயோ பிராந்தியத்தில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் கலாச்சார மற்றும் இலக்கியப் பசியைத் தணிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் அதன் வெள்ளி விழா ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது என்பதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் ஏராளமான நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது மற்றும் பல பிரமுகர்களைக் கொண்டு தரமான பல நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளது. அமெரிக்காவில் உள்ள உள்ளூர்ச் சமூகத்திற்கும், இந்தியாவில் தேவையில் இருக்கும் மக்களுக்கும் உதவுவதற்காக கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் பல்வேறு நிதி திரட்டும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது. கொலம்பஸ் தமிழ்ப் பள்ளியில் சுமார் 200 மாணவர்கள் ஆர்வத்துடன் தமிழ் பயில்கின்றனர். எங்கள் தன்னார்வலத் தொண்டர்கள் நமது தமிழ் மொழி மற்றும் இலக்கியங்களை இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்ல உதவுகிறார்கள். தமிழ் மொழி, இலக்கியம், கலை, கைவினைப்பொருட்கள், சமையல் திறன்கள் மற்றும் விளையாட்டு ஆகியவற்றில் சமூகத்தின் ஆர்வத்தை ஊக்குவிக்கவும், வளர்க்கவும் ஆண்டு முழுவதும் பல்வேறு போட்டிகளை நடத்துகிறோம். கொலம்பஸ் சமூகத்திற்குப் பறையை

அறிமுகப்படுத்தியதில் கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் பெருமிதம் கொள்வதோடு, பரிதி பறைக் குழு உருவாவதற்கும் முக்கியப் பங்காற்றியுள்ளது. சமூகத்தின் அனைத்து வயதினருக்கும் தகுந்த வகையில் பல பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் இளைஞர் பிரிவு 2020 ஆம் ஆண்டில் ஆர்வமிக்க இளைஞர்களைக் கொண்டு தொடங்கப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. கொலம்பஸ் தமிழ்ச்சங்கத்தின் இலக்கியப் பிரிவான தமிழ்த் திண்ணையின் காலாண்டு மின்னிதழான 'சாரல்' தனது மூன்று பதிப்புகளை வெற்றிகரமாக வெளியிட்டு, தற்போது இந்தச் சிறப்பு வெள்ளி விழா இதழை நமக்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

கொலம்பஸ் தமிழ்ச் சங்கத்தின் 25 ஆண்டுகால பயணத்தில் ஏராளமானோர் பல்வேறு வழிகளில் பங்களித்துள்ளனர். இந்தச் சமயத்தில் இதற்காக உழைத்த நிறுவனர்கள், கடந்த காலத் தலைவர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், தன்னார்வலர்கள், ஆதரவாளர்கள் மற்றும் சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நமது மொழி, இலக்கியம், மரபுகள், கலை மற்றும் கலாச்சாரத்தின் மதிப்பைப் பின்பற்றுமாறும், ஊக்குவிக்குமாறும் கொலம்பஸ் வாழ் தமிழ் நெஞ்சங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இது நமக்கான அமைப்பு, அனைவரும் ஒன்றுபட்டு சமூகத்திற்கு மேலும் சிறப்பான சேவைகளை செய்வோம்.

நன்றி!



அன்புடன்,
சந்தியா சரவணன்
தலைவர், கொலம்பஸ் தமிழ்ச் சங்கம்

FCBank

A DIVISION OF CNB BANK

**<u>அமைதியாய் நான்</u>**



**நிர்மலா பழனிராஜா**

அமைதியாய் நான்,

ஆடம்பரமாய் நீ!

ஆசையாய் நான்,

பேராசையாய் நீ!

கொடையாளன் நான்,

கொள்ளையன் நீ!

விடியல் நான்,

தேடல் நீ!



மின்மினி நான்,

மின்வேலி நீ!

நீரோடை நான்,

கானல் நீர் நீ!

சிறகுகள் நான்,

முட்கள் நீ!

பூக்கள் நான்,

தேனீக்கள் நீ!

இருள் சூழ்ந்த இரவுகளை கடந்துவா!

விடியலை நோக்கி பயணிப்போம்..

இலக்கில்லா பயணம்,

நோக்கமில்லா இலக்கு,

வா, சேர்ந்து பயணிப்போம்..

மரங்களுடன்.



என் பெயர் கார்த்திகேயன் முருகேசன். நான் 2004 ஆம் ஆண்டு முதல் கொலம்பஸ் தமிழ்ச் சங்கத்தில் அங்கம் வகித்து வருகிறேன். மாணவ தன்னார்வலர், விளையாட்டு ஒருங்கிணைப்பாளர், நிர்வாக உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளையடுத்து தற்போது பொருளாளராக பொறுப்பு வகித்து வருகிறேன். தமிழ்ச் சங்கத்துடனான எனது பயண காலத்தில் வெவ்வேறு திறமைகள் மற்றும் பின்னணிகளைக் கொண்ட பல அழகான மனிதர்களை நான் சந்தித்தேன். இந்த அமைப்பு இந்தியாவிலும் அமெரிக்காவிலும் நிறைய சமூக செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் எனது வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. இனி வரும் காலங்களிலும் நான் ஏதேனும் ஒரு வழியில் இந்த அமைப்புடன் தொடர்ந்து செயல்படுவேன்.

## தமிழ்ச் சங்கத்துடன் நான்



- முகைதீன்.செ

வணக்கம்.

கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் 25 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைப்பதில் மிக்க மகிழ்ச்சி. இதனை சிறப்புடன் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கும் தன்னார்வலர்களுக்கு நன்றி. இதனை ஒரு உயரிய எண்ணத்துடன் ஆரம்பித்து வைத்த அனைவருக்கும் பணிவான வணக்கங்கள்.

எனக்கு கொலம்பஸ் தமிழ் சங்கத்தில் எட்டு வருடங்கள் தொடர்ந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கொலம்பஸ் தமிழ் சங்கம் நடத்திய சித்திரை விழாவிற்கு சுயநலத்திற்காக சென்றோம். எங்களின் முதல் குழந்தையை பார்த்துக் கொள்வதற்கு ஊரிலிருந்து மாமனார், மாமியார் வந்திருந்தார்கள். எனது மாமனார் தமிழ்நாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான கூட்டமைப்பை நடத்தி வந்தார். தமிழ்நாட்டில் இருந்த அத்தனை மாற்றுத்திறனாளிகளின் சங்கங்களை ஒன்றிணைத்து இந்த கூட்டமைப்பினை நிறுவியிருந்தார். அந்த கூட்டமைப்பிற்கு பணம் திரட்டி அதை மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்காக செலவழித்துக் கொண்டிருந்தார். தமிழர்கள் ஒன்று கூடுமிடம் ஏதாவது இருந்ததால் அங்கு சென்று நன்கொடை கேட்கலாம் என்று கேட்டுக்கொண்டதால் நாங்கள் கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் வந்தோம். அங்கு அவர் மேடையில் பேசி கொஞ்சம் நன்கொடை பெற்றுக்கொண்டார். என்னால் முடிந்த சில உதவிகளை அந்த விழாவில் செய்து கொடுத்தேன். அப்பொழுது தலைவராக இருந்த திரு மணி பெரியகருப்பன் என்னை அழைத்து நீங்கள் தமிழ் சங்கத்திற்கு வாருங்கள் என்று கேட்டுக்கொண்டார். நான் மிகவும் தயங்கினேன். அவர் தொடர்ந்து அழைத்ததனால் என்னை தமிழ்ச் சங்கத்திற்குள் இணைத்துக்கொண்டேன்.

கொலம்பஸ் தமிழ்ச் சங்கத்தில் பணியாற்றிய காலத்தில் நிகழ்ந்த சில குறிப்பிடதக்க நிகழ்வுகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள ஆசைபடுகிறேன். 2007 ஆம் ஆண்டு தமிழ்ப்பள்ளியை தொடங்கினோம். எந்தப் பாடத்திட்டத்தை நடத்துவது, எந்த நேரம் நடத்துவது, எங்கே நடத்துவது போன்ற பல கேள்விகள் இருந்தன. நிர்வாகக் குழுவின் முழு முயற்சியாலும் , சில நிறுவன உறுபினர்களின் ஆதரவினாலும் பள்ளி சிறப்பாக தொடங்கப்பெற்றது. நூலகத்தில் ஆரம்பித்த பள்ளி, நண்பர் ராஜேஸ்வர் சுப்பிரமணியத்தின் உதவியுடன் கைசர் பல்கலைக்கழகத்தில் நடத்தும் வாய்ப்பை பெற்றோம். இப்பொழுது 200க்கும் மேற்ப்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள் என்று நினைக்கிறேன். மென்மேலும் வளர்ந்து நம் தாய்மொழியை தொடர்ந்து கற்பிக்க வாழ்த்துகள்.

முன்பெல்லாம் தமிழ் சங்கத்தில் பணம் இருக்காது. ஆகவே நிதி திரட்ட ஒரே வழி என்னவென்றால் திரைப்படங்கள் திரையிட்டு




லாபம் ஈட்டுவது. 2007 ஆம் ஆண்டு சிவாஜி என்கிற திரைப்படம் வந்தது. அந்தப்படத்தின் விலை 10,000 வெள்ளிகள். அந்தப் பணத்தை நண்பர்கள் நான்குபேர் கொடுத்து, வரும் லாபம் முழுவதும் தமிழ்ச்சங்கத்திற்கு என்று எடுத்து திரையிட்டோம். அந்தப் படம் சிறப்பாக ஓடி ஒரு பத்தாயிரம் வெள்ளிகளை கொடுத்தது. அதுதான் எனக்கு தெரிந்து முதன் முதலாக வங்கிக்கணக்கில் இருந்த பெரும் தொகை.

அதன் பின்பு மிகவும் பொருட் செலவுடன் நாங்கள் நடத்திய நிகழ்ச்சி, மறைந்த பாடகர் திரு எஸ் பி பாலசுப்பிரமணியம் அவர்களை வைத்து 2010 ஆம் ஆண்டு நடத்திய இசை நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியின் மொத்த செலவு மட்டும் 40,000 வெள்ளிகள். அந்த நிகழ்ச்சி முடிந்த பின்பு தமிழ் சங்கத்திற்கு அதன் மூலம் ஒரு 9 ஆயிரம் வெள்ளிகள் பணம் லாபமாய் இருந்தது.

நான் சங்கத்துடன் இணைந்து பணியாற்றிய காலத்தில் நடந்த இந்த மூன்று நிகழ்வுகளும் என்னால் எப்பொழுதுமே மறக்க முடியாது.

கொலம்பஸ் தமிழ்ச் சங்கத்திற்கு நான் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன், ஏனெனில் மீண்டும் எனக்குள் என் வேர்களைத் தேடிப் போகும் ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. மேலும் என் பெற்றோர்கள் ஆசிரியர்கள். கொலம்பஸ் தமிழ்ச் சங்க தமிழ்ப்பள்ளியில் தொடங்கிய என் ஆசிரியப் பணி இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருகிறது. கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் அதன் பின்பு வந்த சிறந்த தன்னார்வ மிக்க தலைவர்களால் மிகவும் நல்ல நிலையில் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் மென்மேலும் வளர என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!


CENTRAL OHIO
PRIMARY CARE
THE BEST FOR PRIMARY CARE
Internal Medicine
Family Medicine
Pediatrics
Hospitalists
Care Coordination
Physical Therapy
Radiology/Imaging
SameDay Centers
Wellness Education
At Central Ohio Primary Care we pride ourselves on the COMPREHENSIVE CARE our doctors offer to our 400,000 patients in over 75 practices across Central Ohio. Our INDEPENDENT PROVIDERS' sole focus is what's best for our patients; which is why we are THE BEST FOR PRIMARY CARE.
Find a COPC doctor in your neighborhood
copcp.com/FindMyDoctor or call (614) 326-4646.

**பயணங்கள் முடிவதில்லை**



**நிர்மலா பழனிராஜா**

ஒரு நாள் இரவு 9.20 மணியளவில் (அலுவலக நேரம், நண்பகல் 12 முதல் இரவு 9 மணி வரை), வேலையை முடித்துவிட்டு அவசரமாக பேருந்து நிறுத்தத்தை நோக்கி நடந்துக்கொண்டிருந்தேன். இடையில், வீட்டிற்கு போன் செய்து குழந்தை என்ன செய்கிறான் என கேட்டு அறிந்தேன். 102 எண் பேருந்து கந்தன்சாவடி பேருந்து நிறுத்தத்தை நெருங்கி வருவதை கவனித்துவிட்டு, இணைப்பை துண்டித்தேன். வேகமாக ஓடி பேருந்தில் ஏறினேன்.



பேருந்து முழுவதுமாக நிறைந்து இருந்தது. சற்று உள்ளே சென்று படிக்கு அருகில் உள்ள ஒரு கம்பியை பிடித்து நின்றுக்கொண்டேன். டிக்கெட் வாங்குவதற்காக என்னுடைய *ladies handbag* -ல் கையை விட்டு wallet-ஐ எடுத்தேன். தேடித் தேடிப் பார்க்கையில், பணமோ அல்லது சில்லறையோ கிட்டவில்லை. அதிர்ந்து போனேன். வேலைபழு, குடும்பம் மற்றும் குழந்தை என்று பல்வேறு விஷயங்களுக்கு மத்தியில் ATM -ல் இருந்து பணம் எடுக்க மறந்துவிட்டேன் என. உணர்ந்தேன்.

இதற்கிடையில், நடத்துனர் என்னை நோக்கி வந்துக்கொண்டிருந்தார்.

நடத்துனர்: எங்க போறீங்க ?

நான்: சத்யா ஸ்டுடியோ.

நடத்துனர்: 11 ருபாய்.

நான்: பணம் இல்லை. ATM -ல் பணம் எடுக்க மறந்துவிட்டேன்.

...................... ஒரு நிமிட அமைதிக்கு பிறகு

நடத்துனர்: நானே தருகிறேன். ஆனால் மீண்டும் இதுபோல் நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். (அவருடைய வார்த்தையில் ஒரு கண்டிப்பும் இருந்தது, ஒரு மனிதாபமும் இருந்தது)

நான்: நிம்மதி பெருமூச்சு விட்டேன்!

இரவு 9.40 மணியளவில், அவர் நினைத்திருந்தால் என்னை பேருந்திலிருந்து கீழே இறங்க சொல்லியிருக்கலாம். ATM-ல் பணம் எடுத்துக்கொண்டு வேறு பேருந்தில் செல்லுங்கள் என சொல்லியிருக்கலாம். அவரை எனக்கு முன் பின் தெரியாது, பிற்காலத்தில் தெரிந்துக்கொள்ளும் வாய்ப்பும் இருக்காது. அன்று அவர் செய்த உதவியை இந்த தருணத்தில் நினைத்து நன்றி கூறுகிறேன்.

வருடம்: 2015-ம் ஆண்டு

பேருந்து வழி தடம்: 102 கேளம்பாக்கம் - பிராட்வே

## சமைக்க ருசிக்க

## கருங்குறுவை இட்லி / தோசை



**நிர்மலா பழனிராஜா**

தமிழ்நாட்டின் பாரம்பரிய நெல் ரகங்களில் மாமருந்தாகப் பயன்படும் ரகம் கருங்குறுவை இதன் நெல் மணிகள் கறுப்பாகவும்,. அரிசி சிவப்பாகவும் இருக்கும். கருங்குறுவை அரிசி கஞ்சி, இட்லி, தோசைக்கு ஏற்ற ரகம்.

கருங்குறுவை பயன்கள்:

- சித்த மருத்துவத்தின் முக்கிய மூலப்பொருட்களில் ஒன்றாகக் கருங்குறுவை அரிசி பயன்படுத்தப்படுகிறது. உடலை வலுவாக்கும் காயகல்ப சக்தியும் உள்ளது.
- கருங்குறுவை சாதத்துடன் மூலிகை சேர்த்து, லேகியம் செய்து சாப்பிட்டு வந்தால், யானைக்கால் நோய் மட்டுப்படும்.
- கருங்குறுவை அரிசியில் குஷ்டத்தையும் விஷக்கடியையும் போக்கும் சக்தி உள்ளது.

கருங்குறுவை இட்லி / தோசை செய்முறை :

- 3 குவளை கருங்குறுவை அரிசி, 1 குவளை இட்லி அரிசி, 1 குவளை உடைத்த கருப்பு உளுந்து - அனைத்தையும் தனித்தனியாக 8 மணி நேரம் ஊறவைக்கவும்.



- ஊறவைத்த கருங்குறுவை மற்றும் இட்லி அரிசியை ஒன்றாக சேர்த்து அரைக்கவும். உளுந்தை தனியாக அரைக்கவும்.
- அரைத்து வைத்த அரிசி மாவு மற்றும் உளுந்து மாவை ஒன்றாகக் கலந்து, கல் உப்பு சேர்த்து இட்லி மாவு பதத்தில் கரைத்து, 5 மணி நேரம் புளிக்க வைக்கவும். இட்லி மாவு தயார்!
- காலை, இரவு சிற்றுண்டிக்கு இட்லி அல்லது தோசையாக செய்து சாப்பிடலாம்

## சத்துமாவு இட்லி



**எதுராஜுலுனைடு சுதர்சன் லாவண்யா**

செய்முறை:

துவரம் பருப்பு, கடலைப் பருப்பு, பாசிப் பருப்பு, உளுத்தம் பருப்பு, கொள்ளு, பச்சைப் பயிறு மற்றும் தினை ஆகியவற்றை சரிசமமான அளவில் எடுத்து 5 மணி நேரம் ஊற வைக்கவும்.



பின்னர் ஊற வைத்த தானியங்கள், காய்ந்த மிளகாய், சீரகம், இஞ்சி மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து கொரகொரப்பாக அரைத்துக் கொள்ளவும்.

இட்லி பாத்திரத்தில் சிறிது தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து சூடாக்கவும். அரைத்து வைத்த மாவு கலவையுடன், ஒரு தேக்கரண்டி Eno தூள் சேர்த்து நன்றாக கலக்கவும். கலந்த மாவை இட்லி தட்டில் ஊற்றி, பாத்திரத்தில் வைத்து மூடவும். 15 நிமிடம் கழித்து எடுத்தால், மென்மையான சத்துமாவு இட்லி தயார்



இதனை காரச் சட்னி அல்லது தக்காளி சட்னி சேர்த்து சாப்பிடவும்.



கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்!' சாத்தியமா? நம் வாழ்க்கைப் பயணத்தில் எத்தனையோ அனுபவங்கள். அவற்றுள் சில புதியதாகவும் வரவேற்கத்தக்கதாகவும் இருக்கும். இன்னும் சில நாம் பழகிய பழக்கங்களை அறவே மாற்றும் வண்ணம் அமையும். நாம் வலதுபுறம் நடக்கும் பழக்கம் இங்கு இடதுபுறமாகியது, மின்விசை மாற்றுக்குமிழ் தலைகீழாகியது, பரவாயில்லை என வாழப் பழகி விட்டோம். அமெரிக்க சம்பளம், இந்திய மனைவி – அதிர்ஷ்டசாலிகள் நாம். அனைத்தும் இருப்பினும் நம் தாய் மொழியில் பேசும்பொழுதும், நாம் சின்ன வயதில் ருசித்த உணவு வகைகளைச் சாப்பிடும் பொழுதும் ஒரு வகையான சார்பு மனப்பான்மை இருக்கவே செய்கிறது. Gladwell சொன்ன 'No matter, where you come from can never be separated from you wherever you go!' போல் தன் 19 வயதில் கலிஃபோர்னியா Berkeley University-யில் கால் பதித்த ஷியாமளா கோபாலன் (Vice President Kamala Harris-ன் தாயார்) 70 வயது வரை இந்த ஊரில் வாழ்ந்து தன் இறுதிக் காலத்தை (2008) தாய் நாட்டிலேயே கழிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டது நிச்சயம் விதிவிலக்கு அல்ல.

நம் தமிழ் மக்களை ஒன்றிணைத்து, தமிழர் கலைகளை அயல் நாட்டிலும் கொடிகட்டிப் பறக்கச் செய்ய 25 ஆண்டுகளுக்கு முன் விதைத்த விதை 'கொலம்பஸ் தமிழ்ச் சங்கம்' இன்று ஆழமாக வேரூன்றி, அகலமான மரமாக வளர்ந்து கோலோச்சி நிற்கிறது. "கோடி கொடுத்தும், கூடிப் பிறந்தோர் தம்மோடு கூடுதல் கோடி பெறும்" என்னும் ஔவைக் கிழவியின் மொழிகளைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த வெற்றிப் பயணத்தில், நானும் ஒரு தன்னார்வலராகப் பணியாற்றும் இந்த சில ஆண்டுகள் நிச்சயம் ஆனந்தமே!



State of Ohio
Procurement
GSA Schedule
DevCare Solutions
DevCare Solutions is a full service IT Solutions Firm based in Columbus, Ohio, specializing in IT Solutions, IT Staffing and IT Project Services. The IT solutions that we offer are completely customizable,versatile, flexible, intuitive, and designed to meet individual business needs.
MBE CERTIFIED
WBENC
Microsoft CERTIFIED
aws partner network
ivanti
* TOP PERFORMING VENDOR UNDER THE FOLLOWING STATE STAFF AUG PROGRAMS: MICHIGAN / OHIO / PENNSYLVANIA
* TOP 5 PERFORMING VENDOR in 16 OTHER STATE STAFF AUG PROGRAMS
* CRM SOLUTIONS - SALESFORCE & MS DYNAMICS
* ITSM SOLUTIONS - IVANTI SOFTWARE TOOLS
* CLOUD SOLUTIONS - AMAZON AWS
* CUSTOM MOBILE APPLICATIONS - XAMARIN, PHONEGAP, ANDROID, IOS
* CUSTOM WEB APPLICATIONS - JAVA, .NET ...
* INC 5000 FASTEST GROWING COMPANIES IN AMERICA
* FAST GROWING PRIVATE 50 COMPANIES IN COLUMBUS
131 N. High Street
Suite 640
Columbus, OH 43215
ph: 614.221.2277
info@devcare.com
www.devcare.com

## வேலையில்லாப் பட்டதாரி



- மலர்விழி மணியம்

“எனிக்கு மோளே...ஸ்கூலுக்கு நேரமாச்சு” என்று தன் மகள் சிந்துவை எழுப்பினார் பாக்யா.

“அப்பு எழுந்துட்டானா?” என்று கேட்டுக்கொண்டே வந்தார் பாக்யாவின் கணவர் விஜய்.

“இன்னும் இல்லங்க. ப்ளீஸ் அவன எழுப்பிக் கிளப்புங்க.’ என்றார் பாக்யா.

விஜயும் பாக்யாவும் ஒரே ஐடி கம்பெனியில் பணிபுரியும் பொழுது காதலித்து திருமணம் செய்துகொண்டவர்கள். பாக்யா கேரளாவைச் சேர்ந்தவர். அதனால் தமிழும், மலையாளமும் கலந்து பேசுவார். விஜய் தமிழகத்தைச் சேர்ந்தவர். விஜய்க்குத் தாய், தந்தை இல்லை. அவருடைய பாட்டியின் பாதுகாப்பில் வளர்ந்தவர். அதனால் பாட்டியை தன்னோடு வைத்துக் கவனித்து வருகிறார்.

“பாட்டிக்குக் காப்பி குடுத்தியா?”என்று கேட்டார் விஜய்.

“அவங்களுக்கு நேரமே பசி, அதனால இட்லியே கொடுத்துட்டேன் சாப்பிட” என்றார் பாக்யா.

தன் பிள்ளைகளை எழுப்பி விட்டுவிட்டு வாசல் தெளித்துக் கோலம் போட வெளியே சென்றார். பாட்டென்றால் உயிர் பாக்யாவிற்கு.அனைத்து வேலைகளையும் பாடிக் கொண்டே தான் செய்வார்.

“மலரே நின்னேக் காணாதிருந்நாள் .....” என்ற மலையாளப் பாடலை பாடிக்கொண்டே கோலம் போட்டுக் கொண்டிருந்தார்.



அதைக் கேட்டுக்கொண்டே செய்தித்தாள் வாசித்துக் கொண்டிருந்தார் பாட்டி. அப்போது பக்கத்து வீட்டு வேணி,அவசர அவசரமாக வேலைக்குச் செல்ல வெளியே வந்தார். தன் கணவரோடு காரில் ஏறும் முன் தன் மகளிடம் திரும்பி,
“ரீத்து... சமத்தா சாப்பிட்டு ஸ்கூலுக்குக் கிளம்பு. மறக்காம வீட்ட பூட்டிட்டுப் போ” என்றார்.

வேணியிடம் இருந்து நழுவி விடலாம் என்று திரும்பும்பொழுது,
“என்னங்க பாக்கியா? இவ்வளவு லேட்டா கோலம் போடுறீங்க?” என்று கேட்டார்.
“ஆமாம்.. கொஞ்சம் தூங்கிட்டேன்.” என்றார் பாக்யா.

“உங்களுக்கு என்னங்க, வீட்ல சும்மா இருக்கீங்க. எப்ப வேணாலும் எழுந்திருக்கலாம். சரிங்க நாங்க கிளம்புறோம்.” என்று தன் கணவருடன் சென்றுவிட்டார்.

வேணியின் பதில் பாக்யாவின் மனதை நறுக்கென வெட்டியது. முகம் வாடித் திரும்பிய பாக்யாவை பாட்டி அழைத்து,

“அவ கெடக்குறா. வேலைக்கு போற ஆணவம் அவளுக்கு. நீ கண்டுக்காத. போயி பிள்ளைகள ஸ்கூலுக்குக் கௌப்பு. மத்தியான சமையலுக்கான காய்கறிகள கொண்டு வாமா வெட்டித் தாரேன் .”என்றார்.

“சரி பாட்டி மா” என்று வருத்தமாக உள்ளே சென்றார் பாக்யா.

மிகவும் புத்துணர்ச்சியோடும், பாட்டோடும் துவங்கிய நாளை வேணியின் வார்த்தைகள் எவ்வளவு எளிதாக நசுக்கியதை எண்ணி மனம் நொந்தது பாக்யாவிற்கு. எப்பொழுது வேணியிடம் உரையாடினாலும் ‘பாக்யா சும்மா இருக்கிறார்’ என்ற வாக்கியத்தை சொல்லி விடுவார் வேணி. அதனாலயே அதிகம் பேச்சு வைத்துக் கொள்ள மாட்டார் வேணியிடம்.

“அம்மே... டிபன் ரெடியா?”என்று கேட்டுக்கொண்டே வந்தனர் சிந்துவும் அப்புவும்.

“ரெடியாகி மோளே. நான் ஊட்டி விடுறேன். நீங்க ரெண்டு பேரும் ஷூ போடுங்க “ என்று ஊட்டி விட்டார்.

ரீத்து உணவு அருந்தி விட்டு, ஸ்கூல் பேக்கை எடுத்துக்கொண்டு வீட்டைப் பூட்டி விட்டு கேட்டைத் திறந்தாள்.

“சரிமா நாங்க கிளம்புறோம்” என்று தன் ஆபீஸ் பேக்கை எடுத்துக்கொண்டு வந்தார் விஜய்.

“பாட்டி கிட்ட சொல்லிட்டு கிளம்புங்க மூணு பேரும்” என்றார் பாக்யா.

பாட்டியிடம் இருந்து முத்தம் வாங்கிக் கொண்டு விடைபெற்றனர் மூவரும். தன் காரில் ஏறும் பொழுது வேணியின் மகளை

அவள் வீட்டு கேட்டில் கண்டு சற்று நின்றார் விஜய்.

“ரீத்து ...வரியா மா அங்கிள் டிராப் பண்றேன்”என்று கேட்டார்.
தயக்கத்தோடு பாக்யாவைப் பார்த்தாள் ரீத்து.

“போ மோளே... ஒரே ஸ்கூல் தான சிந்து-அப்பு கூட பேசிட்டே போடா” என்றார் பாக்யா.

“வா ரீத்து...”என்று சிந்துவும் அப்புவும் ஒருமித்தமாக அழைக்க, உற்சாகமாக ஏறிக்கொண்டாள்.

அவர்களை வழியனுப்பி விட்டு உள்ளே செல்லும் பொழுது பாட்டி பாக்யாவிடம்,

“ஏன் மா, வேணி உன்னய அப்படி காயப்படுத்துறா உன்னால எப்படி அவ பொண்ணு கிட்ட இவ்வளவு பாசமாக இருக்க முடியுது??!!” என்று வியந்து கேட்டார்.

“பாட்டி மா, குழந்தைங்க என்ன தப்பு பண்ணிச்சு. இப்போ இருந்தே அதுங்க மனசில வெறுப்ப விதச்சா எப்படி நல்ல பிள்ளைங்களா வளரும்?. அதுவும் வேணி வேலைக்குப் போனதும் அந்த குழந்தை எல்லாத்தையும் தானாவே செஞ்சுட்டு கௌம்புறா. பத்து வயதிலேயே அந்த தனிமை ரொம்ப கொடுமையானது. அந்த வலி நானும் அனுபவிச்சிருக்கேன் பாட்டிமா. என்ன கஷ்டம் இப்போ, ஒரே ஸ்கூல், சிந்துவோட கிளாஸ்லையே தான் படிக்குறா. ஒன்னா போகட்டும். இல்லன்னா ரீத்து தனியா தான் நடந்து போகணும். “என்றார் பாக்யா.




“சரி.. ஒரு காபி போட்டு தர்ரியா மோளே?”என்று சிரித்துக் கொண்டே பாட்டி கேட்டார்.

“தரேன் மோளே!”என்று சிரித்து பாட்டியின் கன்னத்தைக் கிள்ளி விட்டு உள்ளே சென்றார் பாக்யா.
ஐந்து நிமிடத்தில் பில்டர் காபியோடு வந்தார். காப்பியை வாங்கிக் கொண்டு பாட்டி, “பாக்கி.. இங்க பாரேன் ஏதோ கம்ப்யூட்டர் வேலை வாய்ப்பு விளம்பரம்” என்று செய்தித்தாளைக் காட்டினார்.

“பாட்டி நான் வேலைக்குப் போனா உங்களயும் புள்ளைங்களயும் யார் பார்த்துப்பா?” என்று கேட்டார் பாக்யா.

"என்ஜினீயரிங் படிச்சிட்டு உனக்குக் கஷ்டமா இல்லயா வீட்டுல இருக்க?" என்று கேட்டார். "கண்டிப்பா இருக்கு. ஆனா அதவிட எனக்கு என் குடும்பம் தான் முக்கியம். பெருசா எனக்கு சொத்து சேர்க்க ஆசை இல்ல. என் பிள்ளைகளுக்கு பாதுகாப்பா, சத்தான சாப்பாடு செஞ்சு கொடுத்து, ஆரோக்கியமா வளர்க்கனும். சிந்து பிறந்தப்ப,நான் அவள டே கேர்ல விட்டுட்டு வேலைக்குப் போறேன்னு சொன்னப்ப, விஜய் சொன்னது இன்னும் என் காதில ஒலிக்குது" என்றார் பாக்யா.



"என்ன சொன்னான்?" என்று கேட்டார். "நாம அவங்கள இப்ப டே கேர்ல விட்டா பின்னாடி அவங்க நம்மள டே கேர்ல விட்டுடுவாங்கனு" என்றார் பாக்யா.

"ஹ..ஹ..ஹ.. சரியா சொன்னான் போ" என்றார் பாட்டி.

"அதுக்காக டே கேர்ல விட்டுட்டு போறவங்க தப்பு பண்றாங்கன்னு சொல்லல. அவங்களும் தன் பிள்ளைங்களுக்காக தான் வேலைக்குப் போறாங்க. எனக்கு பெரிய கனவில்ல பாட்டி. எதிர்பார்க்கிறது ஆசைப்படுறது அளவா இருக்கும் போது மனசுக்கும் கஷ்டமா இல்ல. எனக்கு என்ன வேணும்ன்றதுல நான் தெளிவா இருக்கேன். அதுக்காக மத்தவங்கள நான் தப்பு சொல்லல என்னுடைய அபிப்ராயம் இது." என்றார் பாக்யா.

"விஜய் ரொம்ப கொடுத்து வச்சவன் மா" என்றார் பாட்டி.
மாலை 4 மணி...
சிந்துவும் அப்புவும் பள்ளி முடிந்து விஜய் அழைத்து வந்தார்.

"அம்மே.. உளுந்து வடையா??!!" என்று மோப்பம் பிடித்தபடி வந்தான் அப்பு.

"ஆமா டா குட்டா.." என்றார் பாக்யா.

"வாங்க முதல்ல போயி கை கால் கழுவி ஃபெரஷ் ஆகி வரலாம்."என்றார் விஜய்.

"ஓகே அச்சா" என்று இருவரும் பறந்தனர். கை கால் முகம் அலம்பி விட்டு வந்து, உடனே வடையை சாப்பிட அமர்ந்தனர்.

"அம்மா ரீத்துவுக்கும் தரலாமா?" என்று சிந்து கேட்டாள்.

"கண்டிப்பா மோளே.. நான் போயி கொடுத்துட்டு வரேன். நீ ஹோம் வர்க் செய்ய ஆரம்பி" என்று கூறிவிட்டு, வடையை ஒரு கிண்ணத்தில் எடுத்துச் சென்றார்.

அப்பொழுது வேணியும் வேலையை விட்டு வந்தார்.
“என்ன பாக்கியா இது?” என்று வேணி கேட்டார்.

“வடை சுட்டேன். அதான் ரீத்துவுக்கும் தரலாம்னு கொண்டு வந்தேன்.” என்றார் பாக்யா.

“ரொம்ப தேங்க்ஸ்ங்க பாக்கியா. நீங்க வீட்ல சும்மா இருக்கிறதுனால பலகாரம் எல்லாம் செய்ய முடியுது. எனக்கு இதுக்கெல்லாம் நேரமே இல்ல” என்று அலட்டிக் கொண்டார் வேணி .

கடும் கோபத்தோடு மனதில் எழுந்த வார்த்தைகளை கொட்டி விடாமல், தொண்டைக் குழியிலேயே புதைத்து, வடையைக் கொடுத்துவிட்டு அமைதியாக வீட்டிற்குத் திரும்பினார்.

பாக்யா முகம் வாடி வருவதைக் கண்டு விஜய், “என்னம்மா ஆச்சு?” என்று கேட்டார்.

“சில மனுஷங்க பாம்பு மாதிரி, எவ்ளோ தடவ சட்டை உரிச்சாலும் விஷத்தன்ம போகாது” என்று கூறினார்.

“சரி விடுமா.. வா நாம கேரம் போர்டு விளையாடலாம்.” என்று விஜய் பாக்யாவை குஷியாக்கினார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த பாட்டி வேணியிடம் சென்று,
“வேணி உன்கிட்ட கொஞ்சம் பேசணும்” என்றார்.

“சொல்லுங்க பாட்டி.” என்றார் வேணி.
“அம்மாடி, நீ தெரியாமப் பேசுறியா இல்ல வேணும்னே அவளக் காயப்படுத்தனும்னு சொல்றியான்னு தெரியல. வேலைக்குப் போறதும் போகாததும் அவங்கவங்க இஷ்டம். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு வகையான தேவைகள்.அதை நோக்கி ஓடுறோம். அவ இருந்த வேலைய தன் பிள்ளைகளுக்காக விட்டுட்டு வாழ்றா. எப்ப நீ அவகிட்ட பேசினாலும் சும்மா இருக்கே சும்மா இருக்கேன்னு சொல்ற. அந்த வார்த்த அவள ரொம்ப காயப்படுத்துது.




நீ அவள எவ்வளவு காயப்படுத்தற, அவ உன்ன ஒரு நாளாவது மனம் கோணுற மாதிரி பேசி இருப்பாளா? ‘மத்தவங்க மாதிரி பணம் பெருசுனு புள்ளைங்கள அனாதை மாதிரி டே கேர்ல விட்டுட்டு போக மனசில்ல எனக்கு’ன்னு சொன்னா நீ எங்க கொண்டு போய் மூஞ்சியை வச்சுப்ப. எல்லா

உறவுகளுக்கிடையேயும் கோடு இருக்கணும். அத தாண்டிப் போயி அவ முடிவுகள விமர்சனம் செய்யுறது தப்பு. அவ உன் பொண்ணையும் சேர்த்துதான் அப்பப்போ கவனிச்சுக்குறா. நன்றியோடு இல்லன்னாலும் வார்த்தையால என் பேத்தியக் காயப்படுத்தாத. நல்ல மனுஷங்கள உன் வாழ்க்கையில தக்க வச்சுக்கனும்னா எண்ணமும் பேச்சும் சுத்தமா இருக்கணும். நான் வரேன்” என்று கூறி விட்டு வீட்டிற்குத் திரும்பினார்.

கடும் கோபம் வந்தது வேணிக்கு. அதே வேகத்தில் தன் வீட்டின் உள்ளே சென்று, வடையை தூக்கி எறிந்து விட்டு,

“என்ன சொல்லிட்டேன்னு அந்தப் பாட்டி இப்படி எல்லாம் பேசுது. உன்ன என்னடி சிந்துவோட அம்மா பாத்துக்கிறாங்க. உனக்கு நான் எல்லாம் செஞ்சு வச்சுட்டு தான போறேன்.” என்று கோபத்தோடு கேட்டார்.



நண்பர் 1: ஆமாம் டாக்டர் கிட்ட போனியே, என்ன சொன்னாரு?
நண்பர் 2: கொரோனா டெஸ்ட் எடுக்கணுமா எடுத்தா தான் தெரியுமாம்... டெஸ்ட்டுக்கு ஐயாயிரம் ஆகுமாம்.
நண்பர் 1: ஐயையோ, அப்புறம்...
நண்பர் 2: டாக்டர் ரூம்ல வச்சு அச்சுனு தும்மிட்டு வந்துட்டேன். இப்ப அவரு டெஸ்டுக்கு போயிருக்காரு. அவருக்கு பாசிட்டிவ்னா எனக்கும் பாசிட்டிவ். அவருக்கு நெகடிவ்னா எனக்கும் நெகடிவ்

பயந்துபோன ரீத்து பதிலை தொண்டையிலேயே அடக்கி வைத்து அமைதியாக நின்றாள்.

“இனிமே அங்க போனன்னா பாரு” என்று மிரட்டினார்.

அடுத்த நாளிலிருந்து விளையாடக் கூட செல்லவில்லை ரீத்து.
ஒரு வாரம் இப்படியேக் கழிந்தது.
வழக்கம் போல் பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்தனர் சிந்துவும் அப்புவும். அவர்களை வீட்டில் விட்டுவிட்டு விஜய்,

“நான் ஒரு ப்ரெண்ட பார்த்துட்டு ஒரு மணி நேரத்தில வந்துடறேன் மா” என்று சென்றார்.

“என்னடா இப்படி வேர்த்து ஒழுகி வந்திருக்கீங்க. போய் குளிச்சுட்டு வாங்க ரெண்டு பேரும்.” என்றார் பாக்யா.
பாக்யாவின் சொல் பேச்சைக் கேட்டு உள்ளே சென்றனர் இருவரும். பாக்யா வராண்டாவில் அமர்ந்து பாட்டியுடன் பேசிக்கொண்டிருந்தார்.

பத்து நிமிடம் கழித்து,
“அம்மாாாாா……….” என்று அலறும் சத்தம் கேட்டு,

“என்னாச்சு மோளே.......!!!”என்று பதறியபடி ஓடினார் பாக்யா.

“குளிக்க சுடுதண்ணி வச்சேன். அத எடுக்கும் போது, கால்ல கொட்டிட்டேன்.” என்று அழுதபடி கூறியவளை தூக்கிக்கொண்டு வெளியே ஓடினார் பாக்யா.

“என்னம்மா ஆச்சு?” என்று கேட்டார் பாட்டி பதறியபடி.

“சுடுதண்ணியக் கால்ல ஊத்திக்கிட்டா. எப்படி கொப்புளுச்சு இருக்குன்னு பாருங்க பாட்டி” என்று கூறி அழுதார் பாக்யா.

“எங்கள யாரையாவது கூப்பிட கூடாதா சாமி?” என்று பாட்டி கேட்டார்.
பதில் எதுவும் கூற முடியாமல் வலியால் அழுது கொண்டிருந்தவளை பாட்டியிடம் விட்டுவிட்டு,

“நான் போய் ஒரு ஆட்டோ கூட்டிட்டு வரேன்” என்று ஓடினார் பாக்யா.

ஐந்து நிமிடத்தில் ஆட்டோவில் வந்து, “பாட்டி நான் விஜயா க்ளீனிக்குக் கூட்டிட்டுப் போறேன். நீங்க அவ அப்பாக்கு போன் பண்ணி சொல்லிடுங்க” என்றார் பாக்யா.

மருத்துவமனையை அடைந்ததும் நர்ஸிடம் நடந்ததைக் கூற அவருக்கு கோபம் வந்தது, “இப்படித்தான் சின்னப் பொண்ண சுடுதண்ணிய எடுக்க வைக்குறதா மா?” என்று கேட்டார்.

பாக்யா பதில் கூறாமல் அமைதியாக இருந்தார்.
காயத்தை சுத்தம் செய்து மருந்து வைப்பதற்குள் வலி தாங்க முடியாமல் “அம்மாாாாா... ரொம்ப வலிக்குது.” என்று அழுதுகொண்டே இருந்தாள்.

சட்டென கதவைத் திறந்து அழுதுகொண்டே உள்ளே வந்தார் வேணி,

“ரீத்து என்னடா ஆச்சு?” என்று.

“குளிக்க சுடுதண்ணி வச்சிருக்கா. அத எடுக்கும் போது கால்ல கொட்டிக்கிட்டா.அலறல் சத்தம் கேட்டு ஓடிப்போய் பாத்தேன். நீங்க வர்ற வரைக்கும் அவ வலி தாங்க மாட்டான்னு நானே அவள ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டு வந்துட்டேன்.” என்றார் பாக்கியா.
“உங்க பொண்ணு இல்லயா இது?”என்று நர்ஸ் கேட்டார்.

“என் பொண்ணு மாதிரிதான்” என்றார் பாக்யா.

கண்ணீருடன் பாக்யாவைக் கட்டியணைத்து, “ தேங்க்ஸ் பாக்யா” என்றார் வேணி.

யாரேனும் பெரியவர்கள் பாதுகாப்பாக குழந்தைகளுடன் இருக்க வேண்டும் என்கின்ற அவசியத்தை உணர்ந்தார் வேணி. தன் தவறை உணர்ந்து அன்றிலிருந்து யாரையும் காயப்படுத்தாமல் நல்ல தோழியாக மாறினார். ரீத்துவைப் பார்த்துக் கொள்ள தன் அம்மாவை வர வைத்தார்.




## தமிழ்நாடு தமிழைநாடு

**"ண", "ன" மற்றும் "ந" எங்கெல்லாம் வரும்?**

ண'', ''ன'' மற்றும் ''ந'' எங்கெல்லாம் வரும்?
ஒரு எளிய விளக்கம்:

தமிழ் எழுத்துக்களில் இரண்டு சுழி "ன", மூன்று சுழி "ண" என்பதெல்லாம் வெறும் பேச்சு வழக்கு."ண" - டண்ணகரம்,"ன" - றன்னகரம், "ந" - தந்நகரம் என்பதே சரி.

**டண்ணகரம்:**

மண்டபம், கொண்டாட்டம் என எங்கெல்லாம் இந்த மூன்று சுழி "ணகர" ஒற்றெழுத்து வருகிறதோ, அதையடுத்து வருகின்ற உயிர்மெய் எழுத்து 'ட' வர்க்க எழுத்தாகத்தான் இருக்கும். இதனால் இதற்கு "டண்ணகரம்" என்று பெயர்.

மண்டபமா? மன்டபமா? சந்தேகம் வந்தால், அடுத்த எழுத்து என்னவென்று பாருங்கள். "ட" இருந்தால் அது "டண்ணகரம்", மூன்று சுழி 'ண்' தான் வரும்.




**றன்னகரம்:**

தென்றல், சென்றான் என எங்கெல்லாம் இந்த இரண்டு சுழி "னகர" ஒற்றெழுத்து வருகிறதோ, அதையடுத்து வருகின்ற உயிர்மெய் எழுத்து 'ற' வர்க்க எழுத்தாகத்தான் இருக்கும். இதனால் இதற்கு "றன்னகரம்" என்று பெயர்.

கொன்றானா? கொண்றானா? சந்தேகம் வந்தால், அடுத்த எழுத்து என்னவென்று பாருங்கள். "ற" இருந்தால் அது "றண்ணகரம்", இரண்டு சுழி 'ன்' தான் வரும்.

**தந்நகரம்:**

இதே மாதிரித்தான் 'ந' கரம் என்பதை, "தந்நகரம்" என்று சொல்ல வேண்டும். இந்த 'ந்' எழுத்தை அடுத்து வரக்கூடிய உயிர்மெய் 'த' மட்டுமே. (பந்து, வெந்தயம், மந்தை).

எழுத்துப்பிழை இல்லாமல் பிள்ளைகளுக்கு தமிழ் சொல்லித் தர இந்த "ண", "ன" மற்றும் "ந" விளக்கம் பயனுள்ளதாக இருக்கும்.

- படித்ததில் பிடித்தது.

பெண்: ஹலோ, இது கஸ்டமர் கேர் தானே?
கஸ்டமர் கேர்: ஆமாம், சொல்லுங்க மேடம்.
பெண்: என் அஞ்சு வயசு பையன் சிம் கார்டை விழுங்கிட்டான்
கஸ்டமர் கேர்: அப்படினா டாக்டர்கிட்ட கூட்டிகிட்டு போங்க மேடம்
பெண்: இல்லை, அதுல 95 பைசா பேலன்ஸ் இருந்துச்சு. அவன் பேசும் போது அந்த பாலன்ஸ் தீர்ந்திடுமா?
கஸ்டமர் கேர்: ???



## புகைப்படக் கலைஞர்களின் கனவு



நிர்மலா பழனிராஜா

*YOSEMITE'S FIREFALL* - புகைப்படக் கலைஞர்களின் கனவு

கலிஃபோர்னியாவின் *YOSEMITE* தேசிய பூங்காவிலுள்ள ஒரு செங்குத்து பாறை உருவாக்கமான *El CAPITAN* மலைத் தொடரின் கிழக்கு விளிம்பில் பாயும் நீர்வீழ்ச்சி *HORSETAIL FALLS*. இங்கு சூரியன் அஸ்தமிக்கும் அந்தி மாலை நேரத்தில் நடைபெறும் நிகழ்வு தான் இந்த *FIREFALL* நிகழ்வு. சூரியனின் ஒளி இந்த நீர்வீழ்ச்சியில் பட்டு, நெருப்பு அருவி போல் கொட்டும் ஒரு தோற்றத்தைக் கொடுக்கும் காரணத்தினால் வந்ததே இந்த பெயர். இந்த நீர்வீழ்ச்சி குதிரையின் வால் போல் காட்சி அளிப்பதால் இந்த நிகழ்வுக்கு *HORSETAIL* நிகழ்வு என்று மற்றொரு பெயரும் உள்ளது.

இது ஒரு இயற்கையின் அதிசயம். இயற்கைத் தாயின் அருளால் மட்டுமே இந்த நிகழ்வின் முழு அழகையும் நாம் ரசிக்க முடியும். சூரியனின் ஒளி ஒரு குறிப்பிட்ட கோணத்தில் இந்த நீர்வீழ்ச்சியில் விழ வானம் தெளிவாக இருத்தல் அவசியம். மூடுபனி அல்லது சிறிய மேகமூட்டம் கூட இந்த நிகழ்வை வெகுவாகக் குறைக்கலாம் அல்லது அகற்றலாம். எப்படி பார்த்தாலும் இது ஒரு அதிசய நிகழ்வு என்றே சொல்லலாம்.

கடந்த இரண்டு வருடமாக நடைபெறாத இந்த நிகழ்வு, இந்த 2021 ஆம் வருடம் பிப்ரவரி 13 முதல் 25-ம் தேதி வரை நிகழும் என அறிவித்தது *YOSEMITE* தேசிய பூங்கா. மூன்று மாதத்திற்கு முன்னரே இதற்கான முன்பதிவு ஆரம்பமானது. இந்த நிகழ்வு நடைபெறும் இடத்தில் வாகனங்களுக்கு அனுமதி இல்லை. மாலை வேளையில் நிகழும் இந்த அற்புதமான காட்சியை காண ஒவ்வொரு நாளும் ஏராளமான மக்கள் காலையிலேயே வந்து உணவு, இருக்கை, புகைப்படக்கருவி என அனைத்தையும் கையில் தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இந்த வருடம் பார்வையாளர்களின் எண்ணிக்கை ஒரு நாளுக்கு ஐந்தாயிரத்திற்கும் மேலாக இருந்தது.



இந்த அரிய நிகழ்வைக் காணும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. காட்சி முடிந்து சூரியன் அஸ்தமனமானதும் அனைவரும் கைதட்டி தங்களுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். இந்த புகைப்படம், பிப்ரவரி 20-ம் தேதி அன்று எடுக்கப்பட்டது. இத்தகைய தனித்துவமான நிகழ்வை நேரில் பார்த்த ஒவ்வொருவருக்கும் அவர்கள் வாழ்நாளில் மறக்க முடியாத தருணமாகவே இது அமையும் என கருதுகிறேன். நன்றி.


Always Hiring
Technology Professionals
and Graduate Students
American
Business
Solutions,Inc.
Call Toll Free :877-781-ABSI
Visit us at: http://www.absi-usa.com
Inc.
5000
Forbes
GSA
Top 10 IT Firm * Many Direct Clients * Free Sponsorship H1B & GC EB2
OUR SERVICES:
Consulting
Staffing
Solutions

## விடியலை நோக்கி



- அனிதா தேவராஜ்

மரம் இல்லாமல் மழை இல்லை

மழை இல்லாமல் விளைச்சல் இல்லை

விளைச்சல் இல்லாமல் பணம் இல்லை

பணம் இல்லாமல் அரிசி இல்லை

அரிசி இல்லாமல் உணவு இல்லை

உணவு இல்லாமல் தூக்கம் இல்லை

தூக்கம் இல்லாமல் இரவு இல்லை

இரவு இல்லாமல் நல்ல விடியல் இல்லை



விடியலை எதிர்பார்த்து காத்து கொண்டு இருக்கும்

நம் விவசாயிகள் !!!!!!



மறைந்த நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களால் விதை போட்டு ஆரம்பிக்கப்பட்ட நமது கொலம்பஸ் தமிழ்ச் சங்கம், கடந்த 25 ஆண்டுகளில் பெரிய ஆலமரமாக வளர்ந்து, இன்று தாய் மண்ணை விட்டு வெகுதூரத்தில் வாழும் நம் அனைவருக்கும், நமது தாய் மொழியின் செழுமையையும், தமிழ் பண்பாட்டையும் மறக்காமல் பலவிதங்களில் அதை அனுபவித்து மகிழ உதவி வருவதோடு, நாளைய தலைமுறையையும் அதை விட்டு விலகாமல் வைத்திருக்கிறது.

நான் கொலம்பஸில் குடியேறிய 2005 ஆம் வருடம் முதல், கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் என்னும் இந்த பெரிய ஆலமரத்தடியில் அமர்ந்து நிழலை மட்டும் அனுபவித்து வந்தேன். தமிழ்ச் சங்க நிர்வாக பொறுப்பிலிருந்த நண்பர்கள் சிலர் என்னையும் பொறுப்பிற்கு அழைத்த போது ஆர்வம் காட்டாமல் தவிர்த்து வந்தேன். நண்பர்கள் மீண்டும் மீண்டும் அன்புடன் அழைப்பு விடுத்ததால் 2019 ஆம் வருடம் இதன் நிர்வாக குழுவில் இணைந்தேன். ஆரம்பத்தில், இந்த பொறுப்புகளை எல்லாம் என்னால் செய்ய முடியுமா என்ற தயக்கமிருந்தது உண்மை. ஆனால் சக நிர்வாகிகள் அனைவரும் நண்பர்களாக ஆர்வத்தோடு செயல்பட்ட காரணத்தால், எனக்கும் ஆர்வம் அதிகரித்தது.

நமது தாய் மொழிக்காகவும், தமிழ் சமுதாயத்திற்காகவும் சேவை செய்யும் போது உள்ளத்தில் ஒரு நிறைவும், மகிழ்வும் ஏற்படுகிறது. கொலம்பஸில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்ச் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டு செயல்பட்டால், நம் சமுதாயத்திற்காக பணியாற்றிய மன நிறைவு கிடைப்பது மட்டுமல்லாமல், வருங்கால சந்ததிகளும் நம் தாய்மொழியையும், கலாச்சாரத்தையும் போற்றி பாதுகாத்து அதை முழுவதுமாக அனுபவிக்க இயலும்.

-தனசீலன் காளிமுத்து

## கொலம்பஸ் தமிழ்ச் சங்க செய்திகள்



**ஜெகதீஸ்வரன் கணேசன்**

***வெள்ளி விழா ஆண்டு (2021):***

*1996 ஆம் ஆண்டு கொலம்பஸ் வாழ் தன்னார்வலர்களால் விதைத் தூவப்பட்டு, நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அவர்களால் முதல் நீர்த்துளி ஊற்றப்பட்டு, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் தமிழ்ப்பள்ளி, தமிழ்த் திண்ணை, இளைஞர் குழு, கலை மற்றும் பண்பாட்டுக் குழு, விளையாட்டு குழு மற்றும் இன்னபிற விழுதுகளோடு ஆஜானுபாகுவாய் வளர்ந்து நிற்கும் நமது கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் (குடும்பம்) இந்த ஆண்டு வெள்ளி விழா காண்கிறது.*

***2021- முதல் காலாண்டு நிகழ்வுகள்:***

***தமிழ் கூறும் தலைமுறை*** *- வட அமெரிக்கத் தமிழ்ப் பேரவையின் முன்னெடுப்பான ‘இளைய தலைமுறைக்கான பேச்சுப்போட்டி’ நிகழ்ச்சிக்காக நமது சங்கம் வட்டார அளவில் பேச்சுப்போட்டி நடத்தி சிறந்த மாணவப் பேச்சாளர்களை தேர்வு செய்து அனுப்பியுள்ளது. வெற்றியாளர்களான அமுதன் காளிதாசனுக்கும், காவ்யாஸ்ரீ ஜெகதீஸ்வரனுக்கும் எங்களுடைய வாழ்த்துக்கள்.*

***தமிழர் திருநாள் கொண்டாட்டம்*** *- புதிய இயல்பு வாழ்க்கை முறையினால் மனச் சோர்வில் இருக்கும் நமது தமிழ்ச் சொந்தங்களின் அகமுகம் மலர, நிகழ்நிலையில் நாட்டியப் பள்ளி மாணவர்களின் நடன நிகழ்ச்சி மற்றும் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியை நமது சங்கம் மிகச் சிறப்பாக நடத்தி முடித்தது. திருமதி. சுபஸ்ரீ தணிகாச்சலம் அவர்கள் தொகுத்து வழங்க, பின்னணி பாடகர்கள் பங்கேற்புடன் நடைபெற்ற பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சிக்காக வட்டார நண்பர்களைக் குழுக்களாக பங்குகொள்ள ஊக்குவித்ததோடு மட்டுமல்லாமல், பார்வையாளர்களும் தங்களை போட்டியாளர்களாகக் கருதும் வண்ணம் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தி அனைவரும் இன்புறக்கண்டு, சங்கம் அளவில்லா மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டது.*

***Food Drive*** *- நம் தமிழ்ச் சங்கத்தின் இளைஞர் குழு "Food Drive" நடத்தி நாம் வாழும் சமூகத்திற்கு அதன் பங்களிப்பை மிகச் சிறப்பாக செய்து முடித்துள்ளது.*

***கற்றவை பற்றவை*** *- இந்தத் தலைமுறையின் தமிழ் மற்றும் தமிழ் எழுத்து சார்ந்த ஆர்வம் தொடரவும், வளரும் தலைமுறையின் ஆர்வத்தைத் தூண்டவும், கவிதை மற்றும் கட்டுரைப் போட்டியை சிறப்பாக நடத்தி முடித்திருக்கிறது நமது சங்கத்தின் இலக்கிய விழுதான தமிழ்த் திண்ணைக் குழு.*

**வருங்கால முன்னெடுப்புகள்:**

***Are you ready for college?*** - மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் தங்களை கல்லூரிக்கு எவ்வாறு தயார்படுத்துவது என்பது குறித்து ஒரு பட்டறை மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஏற்பாடு செய்துள்ளது நமது கொலம்பஸ் தமிழ்ச் சங்கம். சுயாதீன கல்லூரி ஆலோசகர் திருமதி. தேவி செல்வகுமார், பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர் குழு உறுப்பினர்களுடன் நமக்கு வழிகாட்டவும், நம் கேள்விகளுக்கு பதிலளிக்கவும் வருகிறார்.

**பேச்சு மன்றம்** - கொலம்பஸ் வாழ் தமிழ் ஆர்வலர்களின் பேச்சுத்திறனை வளர்க்க, பேச்சு மன்றம் அமைத்து மேடைப் பேச்சுக்கான பயிற்சி மற்றும் போட்டிகளை நடத்தவிருக்கிறது தமிழ்த் திண்ணைக் குழு.









## சித்திரம்





- தனுஷ்ராம் சதீஷ்



சாய் ஸ்ருதி செந்தில் குமார்







- லித்திக்கா பாலாஜி





- யாமினி பிரியா விஜய்ஆனந்த்

## காத்திருந்த காலம்

கணவன், மனைவி இருவரும் ஒரு ஹோட்டலில் ஐஸ்கிரீம் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

“என்னங்க, உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்கணும் போல இருக்கு. கேட்கவா?”

“இதென்ன புதுசா! எப்பவுமே என்கிட்ட கேட்டா பேசுவ... கேளு” என சிரித்தான்

“இல்ல, ஒரு மாசமா சீக்கிரம் வீட்டுக்கு வரீங்க, அடிக்கடி வெளியே கூட்டி போறீங்க, பொண்ணு கூட உட்கார்ந்து பாடம் சொல்லிதரீங்க, திடீர்னு எல்லார் கிட்டயும் நெருக்கமா மாறிட்டீங்க, அதான்...” என்று இழுத்தாள்.

“ஒண்ணுமில்லையே, எப்பவும் போல தான் இருக்கேன்.”

“மறைக்காதீங்க, உங்க முகரைய பார்த்தாலே தெரியுது... சொல்லுங்க”

“என்னத்த சொல்ல...”

“ஏதும் சின்ன வீடு செட் பண்ணிட்டிங்களா? அதை மறைக்கத்தான் இப்படி கொஞ்சுறிங்களா?




“போடி லூசு...” அவன் சிரித்தான். ஆனால் அதில் உயிரில்லை.

மெதுவாக சொன்னான். “நீயா கேட்டபே, சொல்லணும்னு தான் இருந்தேன்” என கொஞ்சம் சீரியஸ் ஆனான்.

“என்னங்க ஏதும் பிரச்சினையா?” படபடத்தாள்.

அவன் இல்லையென தலையாட்டியபடி அவனது அலுவலக பையை திறந்தான். ஒரு டைரியை திறந்து ஒரு பேப்பரை எடுத்து நீட்டினான்.



“என்னங்க இது?”

“படி” என சொல்லிவிட்டு பின்னால் நகர்ந்து அமர்ந்தான்.

அவள் படிக்கத் தொடங்கினாள். அவன் கண்கள் கண்ணீர் சிந்த ஆரம்பித்தது...



அன்புள்ள மகனுக்கு,

கண்டிப்பா என்னைக்காவது இந்த கடிதம் உன் கையில கிடைக்கும்னு நான் நம்புறேன். உங்கப்பாவுக்கு மனைவியா, உனக்கு அம்மாவ இந்த கடிதம் எழுதுறேன்.

ரொம்ப பெரிய கடிதம், பொறுமையா படி. அவசரமா வேலை இருக்குனு பாதி படிச்சு மீதிய இன்னொரு நாள் காத்திருந்து படிக்காத.

உங்கப்பாவ நான் கல்யாணம் பண்ணும்போது, நான் காலேஜ் லெக்சரர்.

அப்புறம் நீ வந்த பிறகு உங்கப்பாக்கு அதிர்ஷ்டம் அடிச்சுது. இன்னும் கன்ஸ்ட்ரக்ஷன்ல வளர்ந்தாரு. அப்புறம் உன் தங்கச்சி பிறந்தா ...

நான் வேலையை விட்டுட்டு வீட்டோட உங்கள கவனிச்சுட்டு இருந்தேன். உனக்கு தான் தெரியுமே அப்பா எப்படி பிசின்னு.

கல்யாணம் ஆன ஒரு வருஷம் தான் கனவு வாழ்க்கை. அப்புறம் எல்லாமே காத்திருந்த வாழ்க்கைதான். உங்கப்பாவுக்கு காத்திட்டு இருந்தேன். அவர், அவர் உருவாக்க நினைச்ச ஆடம்பர வாழ்க்கைக்காக உழைச்சிட்டு இருந்தார்.

நீங்க ரெண்டு பேரும் தான் எனக்கு துணை. நாம தான் விளையாடுவோம்.

அப்புறம் நீங்க ஸ்கூலுக்கு போய்ட்டீங்க.. நீங்க வரதுக்கு காத்திட்டுருப்பேன். ஸ்கூல் விட்டு வந்ததும் கதை கதையா சொல்லுவீங்க, அதுல பாதி பொய் இருக்கும்.

அதெல்லாம் உங்க கற்பனைன்னு நினைச்சு ரசிச்சேன்.

அப்புறம் நீங்க வளர்ந்தீங்க..

அம்மாட்ட சொல்ல ஏதும் இல்லாம போச்சு.ஆனா உங்கள்ட்ட இருந்து ஆர்டர் மட்டும் வந்துச்சு. இப்ப வெளியே போகணும், இப்படி வெளியே போகணும்னு. ஆனா திரும்ப வர்ற டைம் கேட்க முடியுமா அம்மாவால!?

காத்திட்டு இருப்பேன்... நீங்க சாப்டு வரீங்களா, சாப்டாம வரீங்களானு பார்க்க காத்திட்டு இருப்பேன்....

நீங்க எக்ஸ்ட்ரா கோச்சிங், பிரண்ட்ஸ் அரட்டைனு பிசி. இடையில உங்கப்பா உடம்பு முடியாம படுத்துட்டாரு. அவருக்கு டயத்துக்கு மாத்திரை கொடுக்கணும், மருந்து

கொடுக்கணும், பிசியோதெரபி பண்ணணும்னு காத்திட்டுருப்பேன்.

காத்திட்டு இருக்கிறதே என்னோட வாழ்க்கை ஆயிடுச்சு பாத்தியா?

அப்புறம் உன் தங்கச்சி கல்யாணம். அதுக்கப்புறம் அவளா முடிவு செய்ற நேரத்திலதான் என் கூட பேசுவா. ஏன்னா அங்க அவ காத்துட்டு இருக்கா, ஒரு அம்மாவா...

உனக்கு சொல்லவே வேண்டாம். அப்பா தொழில எடுத்து செய்ய ஆரம்பிச்ச உடனே நீ ரொம்ப பிசியாகிட்ட. நீ கடைசி அஞ்சு வருஷத்துல அம்மாட்ட பேசுனத கொஞ்சம் யோசியேன்...

டீ சாப்டீங்களா, மாத்திரை போட்டாச்சா, ஊசி போட்டாச்சா, இவ்ளோதான்.

உங்கப்பா வாழ்ற காலத்தில பிசியா இருந்தாரு, நான் காத்திட்டு இருந்தேன். கடைசி காலத்தில எதுவும் இல்லாம இருந்தாரு, ஆனா மாத்திரைக்கு காத்திட்டு இருந்தாரு.

என்கிட்ட பேச அவருக்கு விஷயமே இல்லை. பேப்பர் படிச்சாரு. புக் படிச்சாரு. தூங்குனாரு. ஏண்ணா பேச வேண்டிய காலத்தில பேசல, பேச நேரமிருந்த காலத்தில பேச விஷயமில்லை, அனுபவமும் இல்லை.

இப்படித்தான் பெரும்பாலான அம்மாக்கள் வாழ்க்கை முடிஞ்சு போகுது.

நாம என்னைக்காச்சும் வெளியே போகும் போது, அங்க நிறைய அம்மாக்கள பார்ப்பேன். அவங்க எல்லார் கண்ணிலும் எனக்கு தெரியுறது காத்திருந்த ஏக்கம் மட்டும் தான்.

உன்னை மாதிரி பசங்க கூட வர்ற அவங்க மனைவிகளை பார்ப்பேன்.

அதுல இன்னைக்கே வாழ்ந்துடனும், அடுத்த ஆறு நாள் இவன் கூட பேசக்கூட முடியாது என்ற ஒரு வேகம் இருக்கிறத பார்த்தேன்.

இன்னைக்கு ஒரு நாள் தானேன்னு புள்ளைங்க கேட்கிறத எல்லாம் செய்ற அப்பாக்கள பார்த்தேன். இது கொஞ்சம் கொஞ்சமா அவங்களுக்கு காரியம் சாதிக்கிற நாள் ஆகிடுதுனு புரிஞ்சுது. உங்களுக்கு, ஒரு நாள் தானேன்னு ஒரு நினைப்பு வந்துடுச்சு.

இதெல்லாம் ஏன் இப்ப சொல்றேனு யோசிக்றியா, என் காலத்துல இதெல்லாம் உங்கப்பாட்ட சொல்லி புரிய வைக்க முடியல. ஆனா நீ அடுத்த ஜெனரேஷன், கொஞ்சம் யோசிப்பில்ல...அதான் உன்கிட்ட சொல்றேன்.

நான் உயிரோடு இருக்கும் போது சொல்ல முடியல, சொன்னாலும் உன்னால கேட்க முடியாது. அதனால தான் இப்ப சொல்றேன்.

உனக்கு வீட்ல ஒரு பொண்ணு இருக்கா, மனைவி இருக்கா, காத்திட்டு இருக்காங்க...



உன் தங்கச்சிக்கு உங்கப்பா மேல இருந்த பாசம் உனக்கு தெரியாது. ஆனால் அத அவ வெளிக்காட்டும் போது உங்கப்பா கட்டில்ல நகர முடியாம இருந்தாரு.

அவரு தான் அப்பானு அவ காலேஜ்க்கு, ஸ்கூலுக்கு தெரியாத அளவுக்கு அவர் பிசி... அப்பா கூட அங்க போகணும், இங்க போகணும் என்கிற எந்த ஆசையும் நிறைவேறல..

அப்பா கடைசி காலத்தில சும்மா இருந்தபோது அவர் பேசுனத அவ கேட்க முடியல... ஏன்னா, அவ வேற வீட்டுக்கு போய்ட்டா. பாத்தியா வாழ்க்கைய!

நீ உன் பொண்ணுக்கு அப்படி ஒரு வாழ்க்கையை கொடுத்துடாத, உன் மனைவி அவளோட மகனுக்கு கடிதம் எழுத வச்சிடாத...

இன்னைக்கு மூணு வேளை சாப்பிட சம்பாதிச்சுட்டு, நாளைக்கு மூணு வேளையும் உனக்கு பிரச்சனை இல்லை.

இன்னும் சொல்லப் போனா, நீ இப்ப உழைக்கிறது நீ அடுத்த பத்து வருஷம் கழிச்சு செலவழிக்க போறதுக்குத் தான். அத கொஞ்சம் குறைச்சிக்கோ..

சீக்கிரம் வீட்டுக்கு வா...பொண்டாட்டி, புள்ளைககிட்ட பேசு... அவங்களுக்கும் நீ நல்லா இருக்கும் போதே கொஞ்சம் நேரம் கொடு....

ஏண்ணா, அன்புக்காக காத்திட்டு இருக்கிறதும், ஒருத்தர காக்க வைக்கிறதும் ஒரு வாழ்க்கையா?

செய்வேனு நம்புறேன்! என்கிட்ட நல்லா பேசின பையன் தானே நீ... உன் மனைவி, மகள விட்டுடவா போற...

---

கடிதத்தை படித்து முடித்தாள். அவள் முகம் ஒருவித பரபரப்பில் இருந்தது.

நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்....

இரண்டு மிகப்பெரிய பலூடா ஐஸ்கிரீம் வந்திருந்தது. அவள் மெதுவாய் தன் அலைபேசியை எடுத்து அவள் அம்மாவிற்கு போன் செய்தாள்.

"நான் தான்மா"

.....

"ஏன், சும்மா பேசக்கூடாதா?"

.....

"என்ன செய்ற?"

.....

"அப்பா என்ன செய்றாரு?" என பேசத் தொடங்கினாள்.

ஐஸ்கிரீம் கொஞ்சம் கொஞ்சமாக உருகத் தொடங்கியது. அவன் சிரித்தபடி சாப்பிடத் தொடங்கினான்.

இனிமேல் அப்படித்தான்.

இனி அங்கே அன்புக்காக காத்திருக்க அவசியமில்லை. நேரில் நாம் செல்ல முடியாமல் இருந்தாலும் போன் மூலமாக தினமும் பேசி மகிழ்வோம். நம்முடைய சராசரி வாழ்க்கை 60 ஆண்டுகள் என்று வைத்துக்கொண்டு இன்று முதல் மகிழ்ச்சியுடன் வாழ்வோம்..!!!

--------------படித்ததில் பிடித்தது


IntelliX Software, Inc.
Delivering Real Solutions, On Time, On Budget


Ras Pro Sound and Vision
Birthday Parties
Weddings
Receptions
Private Parties
Corporate Events
614 849 2931


AllStates CPA
The power to make a difference,
the people to make it count.
www.AllStatesCPA.com


Red1Realty


Hutta&Cook
ORTHODONTICS
Dublin | Worthington
www.huttasmiles.com


Natiyalayam Dance School
Suneetha Ravindran
614 209 7846


NELLAI MARTS


Priya Gajaananan


With Best Compliments from
TRABUE GARAGE
AUTOMOTIVE SERVICE


GUPTA & ASSOCIATES, CPA, LLC
CERTIFIED PUBLIC ACCOUNTANTS
"YOUR GROWTH IS OUR SUCCESS"
614-344-4246

Thank You

## தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு

## ஆலோசனைக்குழு



ஜான் குயிலன்



உஷா விவேக்



செந்தில் துரைசாமி

## செயற்குழு



சந்தியா சரவணண்

தலைவர்



பிரியதர்ஷினி செல்வராஜ்

செயலாளர்



கார்த்திக் முருகேசன்

பொருளாளர்



செந்தில் வெங்கடாசலம்

வலைத்தள ஒருங்கிணைப்பாளர்



தனசீலன் காளிமுத்து

விளையாட்டு ஒருங்கிணைப்பாளர்



ஜெகதீஸ்வரன் கணேசன்

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்



அன்னலட்சுமி தேவசுந்தரம்

போட்டி ஒருங்கிணைப்பாளர்



மதிவதனி சாந்தி-ஈஸ்வரன்

கலை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்



கண்ணன் மாணிக்கம்

தகவல்தொடர்பு ஒருங்கிணைப்பாளர்

## இணை செயற்குழு



வினோத் ராஜ் சுந்தரம் பாபு



பாலாஜி சிவக்குமார்



லாவண்யா ராமு



சிவசங்கரி கணேஷ்



காயத்ரிதேவி முத்து

## சாரல் ஆசிரியர் குழு



சிவக்குமார் ராஜு



தனசீலன் காளிமுத்து



மதிவதனி சாந்தி-ஈஸ்வரன்



பத்மா முத்துகுமார்



ஜெகதீஸ்வரன் கணேசன்



பிரபாவதி செல்லன்



ரம்யா ராஜமாணிக்கம்



வினோத் ராஜ் சுந்தரம் பாபு



பாலாஜி சிவக்குமார்



ஷைனி அஜி வேலுசாமி

## வடிவமைத்தோர் குழு



சிவசங்கரி கணேஷ்



லாவண்யா ராமு



காயத்ரிதேவி முத்து

## சரிபார்த்தோர் குழு





**சத்தியமூர்த்தி** **மோஹனப்ரியா** **ரம்யா**

E2 INFOSYSTEMS

வெள்ளி விழா ஆண்டு

அன்பு வாசகர்களுக்கு, அடுத்து வெளிவரவிருக்கும் கோடை கால இதழில் கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் உருவான கதை, உங்கள் கனவுத்தோட்டம் எனப் பல சுவாரசியமான தகவல்கள் உங்களுக்காக காத்திருக்கிறது...

விரைவில் சந்திப்போம்